ஆஆ .....ஆஆ ...ஆ
ம்ம்ம் ..ம்ம்ம்
ஆஆ ..ஆஆ

தமிழீழ பாடகன் பாடுகிறேன் என் குரல் கேட்குதா
என் தாயக வாசலை என்றும் தேடுகிறேன் என் குரல் கேட்குதா
கடல் தாண்டி வாழ்ந்தாலும் நினைவெல்லாம் மாவீரம்
காலங்கள் கடந்தாலும் விடிவாகும் தமிழீழம்
மாவீரரின் கல்லறை மனங்களில் மறையாது
எம் விடுதலை கருவறை என்றும் அழியாது
தமிழீழ பாடகன் பாடுகிறேன் என் குரல் கேட்குதா
என் தாயக வாசலை என்றும் தேடுகிறேன் என் குரல் கேட்குதா

இசை

உணர்வின் அழகில் கரையும் எங்கள் மாவீரர் துயிலிடம்
உலகம் முழுதும் தமிழர் நெஞ்சில் எழுதிடும் காவியம்
மானத்தின் வேர்களும்மை மனமுருகிப் பாடுகிறேன்
மரணத்தை வென்ற நெஞ்சில் மகுடத்தை சூடுகிறேன்
வீரரே மா வீரரே இங்கு மீண்டும் ஒருமுறை வரவேண்டும்
எம் வாசலில் உம் காலடி புது வல்லமை அதை தரவேண்டும்
வீரரே மா... வீரரே இங்கு மீண்டும் ஒருமுறை வரவேண்டும்
எம் வாசலில் உம் காலடி புது வல்லமை அதை தரவேண்டும்
தமிழீழ பாடகன் பாடுகிறேன் என் குரல் கேட்குதா
என் தாயக வாசலை என்றும் தேடுகிறேன் என் குரல் கேட்குதா

இசை

உரிமை வாழ வீழ்ந்த எங்கள் மாவீரர் ஒளிமுகம்
உணர்வு சுமந்த நெஞ்சில் எங்கள் கனவுகள் புது யுகம்
தேகத்தில் குண்டைதாங்கி வீழ்ந்தவரை பாடுகிறேன்
தேசத்தை வரைந்த நெஞ்சை திசை எங்கும் தேடுகிறேன்
ஈழமே தமிழ் ஈழமே மாவீரர் கனவுக்கு உயிர் வேண்டும்
அவர் காலமே எங்கள் காவியம் புது விடுதலை தேசம் பெறவேண்டும்
ஈழமே தமிழ் ஈழமே மாவீரர் கனவுக்கு உயிர் வேண்டும்
அவர் காலமே எங்கள் காவியம் புது விடுதலை தேசம் பெறவேண்டும்
தமிழீழ பாடகன் பாடுகிறேன் என் குரல் கேட்குதா
என் தாயக வாசலை என்றும் தேடுகிறேன் என் குரல் கேட்குதா

தமிழீழ பாடகன் பாடுகிறேன் என் குரல் கேட்குதா
என் தாயக வாசலை என்றும் தேடுகிறேன் என் குரல் கேட்குதா
கடல் தாண்டி வாழ்ந்தாலும் நினைவெல்லாம் மாவீரம்
காலங்கள் கடந்தாலும் விடிவாகும் தமிழீழம்
மாவீரரின் கல்லறை மனங்களில் மறையாது
எம் விடுதலை கருவறை என்றும் அழியாது
தமிழீழ பாடகன் பாடுகிறேன் என் குரல் கேட்குதா

என் தாயக வாசலை என்றும் தேடுகிறேன் என் குரல் கேட்குதா....